[5th March 1963

ஹரிஜனங்களில் யாராவது நடத்த முடியும் என்று எண்ணினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் மனு செய்து கொண்டால் வேண்டிய அனுமதி கொடுப்பார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், ஒரு பஸ் ரூட்டை அனுமதித்த பின்னால் அப்பீல் எதுவும் செய்யக்கூடாது என்று அரசாங்கம் சட்டத்தைத் திருத்துவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு செய்வது உசிதம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கா. நா. பழனிசாமி : பஸ் ரூட்டுகள் கொடுத்ததில் இது வரை எத்தனை ஹரிஜனங்கள் நடத்தாமல் விட்டுவிட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

* 124 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of temporary permits for bus-routes issued in Tiruchirappalli district during the year 1961–62, prior to General Elections;

(*b*) how many of such temporary permits have since been regularised; and

(*c*) how many of them are still in force as temporary?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Seventy-eight temporary permits were issued for the four months of November 1961 to February 1962.

(*b*) Sixty-one.

(*c*) Seventeen.

திரு. மா. இராசாங்கம் : ஸார் ; பெரியகுளம் தாலூக்காவில் சர்க்கார் துரித பஸ்கள் எதுவுமில்லையாதலால், அந்தப் பகுதியில் விடுவதற்கு தனியார்கள் யாராவது துரிதபஸ் விடுவதற்கு முன் வந்தால் அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு கொடுக்குமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்விதம் யாராவது முன் வந்தால் கனம் அங்கத்தினர் அவர்களே உற்சாகம் எடுத்து அவர்களை அதிகாரிகளிடத்தில் மனு செய்ய சொன்னால் அதைப்பற்றி அதிகாரிகள் கவனிப்பார்கள்.

பஸ் ரூட்டுகள்

* 125 கேள்வி.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தர்மபுரி தாலுகா பேவுஅள்ளியிலிருந்து பாப்பாரப் பட்டி வழியாக தர்மபுரிக்கு ஒரு புதிய பஸ் ரூட் ஆரம்பிக்கும் படியும், பாப்பாரப்பட்டியிலிருந்து தர்மபுரி வழியாக இண்டூருக்கு

5th March 1963]

ஒரு புதிய பஸ் ரூட்டு ஆரம்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டு பாப்பாரப்பட்டி பஞ்சாயத்திலிருந்து அரசாங்கத்திற்குத் தீர்மானம் ஏதேனும் வந்ததா?

(இ) அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSATLAM : (a) No, Sir.

(b) Does not arise.

இந்திப் பரீட்சை (உயர்நிலைப் பள்ளிகள்)

*126 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி (திரு. வெ. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சார்பாக): கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடுத்த கல்வியாண்டில் இருந்து உயர் நிலைப்பள்ளிகளில் இந்திப் பரிட்சையினை எடுத்துவிடும் உத்தேசமுண்டா?

(இ) இந்தி வகுப்புகள் நடத்துவதைத் தவிர்க்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Government have already issued orders to the effect that examinations need not be conducted in Hindi and in the other languages coming under Part II of the Language scheme in secondary schools.

(b) No, Sir.

நெசவாளர் கூட்டுறவு சங்கம் (சென்னிமலை)

*127 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சென்னிமலையில் ஓர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) An Industrial Co-operative for loomless weavers at Chennimalai was registered on 29th September 1962. The society started on its work on 2nd November 1962 and has also commenced production.

Temples at Karimangalam (Administration)

*128 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the enquiry into the irregularities in the administration of Sri Aruneeswara and Sri Lakshminarayanaswamy temples at Karimangalam has been completed; and

(b) if so, the result thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.